செய்தி மக்கள் தொடர்பு துறை வெளியீடு எண்: 188 நாள்: 3/4/17

# பத்திரிக்கைச் செய்தி

## தொழிலாளர் துறை

தொழிலாளர் துறையில் புதியதாக நியமிக்கப்படவுள்ள ஈப்பு ஓட்டுநர்களுக்கு எழுத்துத் தேர்வு எதிர்வரும் 09.04.2017 அன்று நடைபெறவுள்ளது.

வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் உள்ள இரு தொழிலாளர் ஆய்வாளர் அலுவலகங்களில் தலா 1 ஈப்பு ஓட்டுநர் வீதம் புதியதாக மொத்தம் 2 ஈப்பு ஓட்டுநர்கள் பணியமர்த்தப்படவுள்ளார்கள்.

ஈப்பு ஓட்டுநர் பணி நியமனம் தொடர்பாக கடந்த 12.10.2015 அன்றைய தேதியில், தினசரி நாளிதழ்களில் இதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து 06.11.2015-ஆம் நாள் விண்ணப்பிக்க கடைசி நாளாக அறிவிக்கப்பட்டது. அதனடிப்படையில் ஈப்பு ஓட்டுநர் பணிகளில் தற்காலிக அடிப்படையில் பணிபுரிவதற்கான விண்ணப்பங்கள் இவ்வலுவலகத்தால் பெறப்பட்டுள்ளது.

மேலும், இப்பணியிடங்களில் பணிபுரிவதற்கு தகுதியான, திறமையான, ஈப்பு ஓட்டுநர்கள் தெரிவு செய்தற்கான, எழுத்துத் தேர்வு எதிர்வரும் 09.04.2017 அன்று முற்பகல் 10.30 மணி முதல் 11.30 மணி வரை TTD ஸ்ரீ வெங்கடேஸ்வரா மேல்நிலைப்பள்ளி, இன்பெண்டரி ரோடு, வசந்தபுரம், (இராஜா தியேட்டர் அருகில்) வேலூர் என்ற விலாசமிட்ட மேல்நிலைப் பள்ளியில் நடைபெறவுள்ளது. எழுத்துத் தேர்வு மூலம் தெரிவு செய்யப்படுபவர்கள் ஓட்டுநர் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு மூலம் பணியமர்த்தப்படுவார்கள். எழுத்துத் தேர்வில் கலந்துகொள்ள, தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நுழைவுச் சீட்டு, தபால் மூலம் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளது. நுழைவுச் சீட்டு கிடைக்கப்பெறாதவர்கள், தங்களது மாவட்டத்தில் உள்ள, மாவட்ட தொழிலாளர் ஆய்வாளர் (Inspector of Labour) அலுவலகத்தில் அலுவலகப்பணி நாட்களில் நேரில் சென்று பெற்றுச் செல்லுமாறும் விண்ணப்பதாரர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் என தொழிலாளர் ஆணையர் திரு. கா. பாலச்சந்திரன், இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்தார்.

31/3/17

தொழிலாளர் ஆய்வாளர்,
வேலூர்.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
வேலூர்.

03.4.2017
செ.ம.தொ.அ.
வேலூர்- 9.